# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## எட்டாம் திருமொழி - வானோரளவும்
## திருக்கண்ணபுரம் 8 - தசாவதாரம்

** வானோர் அளவும் முது முந்நீர் *
வளர்ந்த காலம் * வலி உருவின்
மீனாய் வந்து வியந்து உய்யக்
கொண்ட * தண்தாமரைக் கண்ணன் **
ஆனா உருவின் ஆன் ஆயன் அவனை *
அம் மா விளை வயலுள் *
கானார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 1

மலங்கு விலங்கு நெடு வெள்ளம்
மறுக * அங்கோர் வரை நட்டு *
இலங்கு சோதி ஆரமுதம் *
எய்தும் அளவோர் ஆமையாய் **
விலங்கல் திரியத் தடங்கடலுள் *
சுமந்து கிடந்த வித்தகனை *
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 2

பாரார் அளவும் முது முந்நீர் *
பரந்த காலம் * வளை மருப்பில்
ஏரார் உருவத்து ஏனமாய் *
எடுத்த ஆற்றல் அம்மானை **
கூரார் ஆரல் இரை கருதிக் *
குருகு பாயக் கயல் இரியும் *
காரார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 3

உளைந்த அரியும் மானிடமும் *
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து *
விளைந்த சீற்றம் விண் வெதும்ப *
வேற்றோன் அகலம் வெஞ்சமத்து **
பிளந்து வளைந்த உகிரானைப் *
பெருந்தண் ஸெந்நெல் குலை தடிந்து *
களஞ்செய் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 4

தொழுநீர் வடிவின் குறள் உருவாய் *
வந்து தோன்றி மாவலி பால் *
முழுநீர் வையம் முன் கொண்ட *
மூவா உருவின் அம்மானை **
உழுநீர் வயலுள் பொன் கிளைப்ப *
ஒருபால் முல்லை முகையோடும் *
கழுநீர் மலரும் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 5

வடி வாய் மழுவே படையாக *
வந்து தோன்றி மூவெழுகால் *
படியார் அரசு களை கட்ட *
பாழியானை அம்மானை **
குடியா வண்டு கொண்டுண்ணக் *
கோல நீலம் மட்டுகுக்கும் *
கடியார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 6

வையம் எல்லாம் உடன் வணங்க *
வணங்கா மன்னனாய்த் தோன்றி *
வெய்ய சீற்றக் கடி இலங்கை *
குடிகொண்டு ஓட வெஞ்சமத்து **
செய்த வெம்போர் நம் பரனைச் *
செழுந்தண் கானல் மண நாறும் *
கைதை வேலிக் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 7

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் *
ஒருபால் தோன்றத் தான் தோன்றி *
வெற்றித் தொழிலார் வேல் வேந்தர் *
விண் பால் செல்ல வெஞ்சமத்து **
செற்ற கொற்றத் தொழிலானைச் *
செந்தீ மூன்றும் இல்லிருப்ப *
கற்ற மறையோர் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 8

துவரிக் கனி வாய் நிலமங்கை *
துயர் தீர்ந்து உய்யப் பாரதத்துள் *
இவரித்த அரசர் தடுமாற *
இருள் நாள் பிறந்த அம்மானை **
உவரி ஓதம் முத்துந்த *
ஒருபால் ஒருபால் ஒண்செந்நெல் *
கவரி வீசும் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 9

** மீனோடு ஆமை கேழல் அரி
குறளாய் * முன்னும் இராமனாய்த்
தானாய் * பின்னும் இராமனாய்த் *
தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான் தன்னை ** கண்ணபுரத்து
அடியன் * கலியன் ஒலி செய்த *
தேனார் இன்சொல் தமிழ் மாலை *
செப்பப் பாவம் நில்லாவே 10

**அடிவரவு:** வானோர் மலங்கு பார் உளைந்த தொழு வடி வையம் ஒற்றை துவரி மீனோடு கைம்மானம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**